# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/34 - 2022 ජනවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.13

*2262/34 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், பின்வரும் ஒழுங்குபடுத்தப்பட்ட விதிமுறைகளைப் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**பசில் ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, சனவரி 13.*

**ஒழுங்கு விதிமுறைகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் "2022 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்" என அழைக்கப்படும்.

2. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

3. திருத்தப்பட்ட, 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2044/40 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி அனுமதிப்பத்திர ஒழுங்குவிதிகளின் I ஆவது அட்டவணையின், தொடர் இலக்கம் 17 இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ள பின்வரும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய குறிப்புக்கள் இதன் மூலம் நீக்கப்படுகின்றன.

| | *I ஆவது நிரல்*<br><br>*ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் தலைப்பு* | *II ஆவது நிரல்*<br><br>*ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீடு* | | *III ஆவது நிரல்*<br><br>*விபரம்* | *IV ஆவது நிரல்*<br><br>*இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம் (L)* |
|---|---|---|---|---|---|
| **17** | **05.11** | | | **வேறு எந்த இடத்திலும் குறிப்பிடப்படாத அல்லது உள்ளடக்கப்படாத கால்நடை உற்பத்திகள் மனிதர்கள் உணவாகக் கொள்ளத் தகுதியற்ற 1 அல்லது 3 ஆவது அத்தியாயங்களின் இறந்த மிருகங்கள்** | |
| | | 0511.10.00 | - | மாடுகளை ஒத்த மிருகங்களின் விந்தணு எச்சங்கள் | **L** |
| | | 0511.99.20 | --- | பன்றிகளின் விந்தணு எச்சங்கள் | **L** |
| | | 0511.99.30 | --- | ஆடுகளின் விந்தணு எச்சங்கள் | **L** |

4. கால்நடை உற்பத்திகள், சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட செல்லுபடியான கால்நடைகள் தனிமைப்படுத்தல் சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீடு 0511.10.00, 0511.99.20 மற்றும் 0511.99.30 இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களைச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் விடுவிக்க வேண்டும்.

EOG 01-0182